DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 272/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 3 |
| Name | கொங்குராஜ் |
| Father / Husband Name | மெய்யப்பன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 20th June 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவில் தாலுகா, சிரமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் சிரமம் கொங்கையா கோவில் பூசாரியாக இருந்து வருகின்றேன். விபத்தில் காயம்பட்டு இறந்த இராமையாவும் கொங்கையா கோவில் பூசாரியாக வேலை செய்து வந்தார். அ.சா.1 ஐத் தெரியும் அவரும் அந்த கோவிலில் பூசாரியாக இருக்கிறார்.

2) கடந்த 23.01.2020 ம் தேதி மாலை 04.30 மணியளவில் சிரமம் கிராமத்திற்கு செல்வதற்காக நானும், கொங்கு என்பவரும் ஆர்ச் அருகே வந்த போது காளையார்கோவில் காவல் நிலைய போலிசார் எங்கள் இருவரையும் அழைத்து வழக்கு பற்றி எடுத்துக்கூறி எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பார்வை

மகஜரை சம்பவ இடத்தில் வைத்து டைப் செய்து பிரிண்ட் எடுத்து எங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள்.

3) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் தயார் செய்தவை தான். பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) இறந்த நபர் எங்கள் ஊர்க்காரர் என்றால் ஆமாம் என் ஜயா. நான் கையொப்பம் செய்த அ.சா.ஆ. 2 பார்வை மகஜரில் என்றைய தினம் கையொப்பம் செய்தோம் என்றால் படம் போட்ட அன்று கையொப்பம் செய்தேன். விபத்திற்கு மறுநாளா என்றால் ஆமாம். ஆர்ச் அருகே நிறைய வீடுகள் உள்ளதா என்றால் இல்லை. அந்த இடத்தின் அருகே கோழிக்கடை உள்ளதா என்றால் ஆமாம். விபத்து நடந்த இடத்தில் இரத்தம் கிடந்ததை போலிசார் எழுதிக்கொண்டார்களா என்றால் ஆமாம்.

2) என்னிடம் போலிசார் எந்த இடத்தில் விபத்து நடந்ததாக சொன்னார்கள் என்றால் வேலாமரத்திற்கு அருகில் நடந்ததாக சொன்னார்கள். நான் கையொப்பம் செய்த அ.சா.ஆ. 2 பார்வை மகஜரை நான் வருவதற்கு முன்பு தயார் செய்தனரா என்றால் இல்லை நான் வந்த பிறகு தான் கையொப்பம் செய்தார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றாலும், இறந்தவர் என் ஜயா என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 20.06.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.